தி இந்து

தமிழால் இணைவோம்

http://tamil.thehindu.com RNI No. TNTAM21314/22/1/2013-TC Vol. 1 No. 97



# உழவுக்கு வந்தனை



• விளம்பரதாரர் சிறப்புப் பகுதி •

# உழவர் வளர்ச்சியில் வேளாண் பல்கலை

பாரம்பரியம் மிக்க வேளாண் தொழிலை, தமிழ்நாட்டில் அதிநவீன தொழிலாக மாற்றிய பெருமை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தையே சாரும். குறிப்பாக உற்பத்திப் பெருக்கம் சார்ந்த வேளாண்மை, இன்று சந்தை சார்ந்த வேளாண்மையாக மாறியுள்ளது. அதில் அறிவுத்திறனையும், தொழில்நுட்பத்தையும் ஆதாரமாகக் கொண்டு, விவசாயத்திற்கு புதுவடிவம் கொடுத்துள்ளது இந்த வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

விவசாயத்தில் ஒரு தொழிற்புரட்சியை உருவாக்கியதோடு, உயர் விளைச்சல் தரக்கூடிய நூற்றுக்கணக்கான பயிர் ரகங்களையும், பண்ணை எந்திரங்களையும், மேலாண்மைத் தொழில்நுட்பங்களையும் ஆராய்ச்சியின் மூலம் சாத்தியப்படுத்தியுள்ளது. விவசாயத்துறையில் பயன்படுத்தப்படும் ஏராளமான பயிர் ரகங்களும், வீரிய ஒட்டு விதைகளும் இப்பல்கலைக்கழகத்தின் கண்டுபிடிப்புகளே.

விவசாயம் சார்ந்த கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப்பணி என விவசாயத்தையும், விவசாயிகளையும் மையப்படுத்தி ஏராளமான களப்பணிகளையும் இந்த பல்கலைக்கழகம் செய்து வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கே.ராமசாமி கூறியது:

இயற்கைப் பயிர் வளங்களிலிருந்து பல்வேறு புதிய பயிர் ரகங்கள் மற்றும் ஒட்டு ரகங்களை வேளாண் பல்கலைக்கழகம் உருவாக்கி வருகிறது. இதுவரை சுமார் 788 பயிர் ரகங்களையும், 43 வீரிய ஒட்டு ரகங்களையும் வெளியிட்டுள்ளது.

வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய அண்ணா [R] 4 புதிய ரக நெல் பல்கலைக்கழகத்தின் புதிய வார்ப்பு. இதேபோல, கோ30 ரக சோளத்திற்கு விளைச்சல் மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை அதிகம் என்பதால் நாடு முழுவதும் பிரபலமாக உள்ளது. இதுமட்டுமின்றி மக்காச்சோளம், துவரை, பாசிப்பயறு, உளுந்து, நிலக்கடலை, வெள்ளைநிற எஸ்விபிஆர் 1 ரக எள், பருத்தி என வேளாண் பல்கலையில்



கே.ராமசாமி

கண்டறியப்பட்டுள்ள பயிர் ரகங்கள் இன்று நாடுமுழுவதும் பயன்படுத்தும் வகையில் புகழ்பெற்றுள்ளன.

## நீர்வள நிலவளத் திட்டம்

இத்திட்டம் மூலம் உபவடிநீர் பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி, குறைவான பாசன நீர்த் தேவை கொண்ட மக்காச்சோளம், சூரியகாந்தி, நிலக்கடலை உள்ளிட்டவற்றை அதிகளவில் பயிரிட்டு, தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. கரும்பின் விளைச்சலை உயர்த்த நீடித்த நிலையான கரும்பு சாகுபடி என்ற புதிய தொழில்நுட்பம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறைந்த நீர் தேவை மற்றும் அதிக விளைச்சல், அதிக லாபம் காரணமாக, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை, தமிழக அரசு அதிகளவில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளது. நீடித்த நிலையான கரும்பு சாகுபடியில், குறைந்த அளவு விதை நாற்றுகள், குறைந்த அளவி நீர் மூலம் அதிக விளைச்சல் பெறு முடியும்.

## தோட்டக் கலைத்துறை

தோட்டக்கலைத்துறை இதுவரை, 195 ரகங்களையும், வீரிய ஒட்டுக்களையும் வெளியிட்டுள்ளது. விளைச்சலைப் பெருக்கி, தரமிக்க விளை பொருட்களை உற்பத்தி செய்து, நோய்த் தாக்குதலிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற ஏராளமான தொழில்நுட்பங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பாக மா, வாழை, சப்போட்டா, செடி முருங்கை மற்றும் முந்திரி பயிர்களுக்கு அடர்நடவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பழப்பயிர்களுக்கு சொட்டுநீர் மூலம் உரமிடுதல், ஜவ்வரிசி, மலை வாழை, மற்றும் மலர்ப்பயிர்களுக்கு திசு வளர்ப்பு முறை, பழங்களுக்கும், மலர்களுக்கு தரத்தைக் கூட்டும் முறைகள், பசுமைக்குடிகளில் காய்கறி வளர்ப்பு என தோட்டக்கலைத்துறையில் எண்ணற்ற புதுமைகளை வேளாண் பல்கலைக்கழகம் புகுத்தி வருகிறது.

## துல்லிய பண்ணையத் திட்டம்

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், துல்லிய பண்ணையத் திட்டத்திற்கு கிடைத்த வெற்றி, தற்போது தமிழகம் முழுவதும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இரட்டிப்பு விளைச்சல், துல்லிய தரமான விளை பொருட்கள், அதிக எடை மிக்க விலைபொருட்கள், உயர்ந்த சந்தை விலை, அதிக அறுவடைக் காலம், காய்கறிகளின் வாழ்நாள் தன்மை, நீர்ச் சிக்கனம். மின் சிக்கனம் இவையனைத்துமே திட்டம் இலக்கு. தற்போது அவை வெற்றியும் பெற்றுள்ளன.

## தொழில்நுட்ப இயந்திரங்களின் அறிமுகம்

பல்கலைக்கழகத்தின் சார்பில், இதுவரை 159 வேளாண் பண்ணை இயந்திரங்கள் வெளியாகியுள்ளன. இதில் முக்கியமாக உளிக் கலப்பை என்ற கருவி, மானாவாரி நிலங்களின் ஈரத் தன்மையை அதிகரித்து, கடின மண் தன்மையை தகர்க்கும் தன்மையுடையது.

வெளிநாடுகளிலிருந்து, வேளாண் பல்கலைக்கழகம் இறக்குமதி செய்து அறிமுகப்படுத்திய பாய் நாற்று நடவு இயந்திரங்கள், கோனோ களைக் கருவி, தென்னை மரம் ஏறும் கருவி உள்ளிட்டவை முக்கியத்துவம் வாய்ந்தவை.

## பல்கலையின் பங்கு

பயிர்களின் நல்ல குணாதிசயங்களை பிரித்தெடுத்து, அவற்றை பயிர்களில் புகுத்தி, மரபணு மாற்றப்பட்ட பயிர் ரகங்களை உருவாக்குதல், மரபணு மூலக்குறியீடு தொழில்நுட்பம் மூலம் பயிர் மேம்பாடு ஆகிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. கத்தரி ரகங்களில் பிடி மரபணுவைப் புகுத்தி, நோய் எதிர்ப்புத்தன்மை மிக்க ரகங்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் மூலம், அதிக விளைச்சல், குறைந்த செலவு, காய்கறிகளின் தரம் ஆகியவை உறுதிப்படுத்தப்படுகின்றன. பச்சைப்பயிறில் வைரஸ் நோய் எதிர்ப்பு ரகம் உருவாக்கும் ஆய்வும் நடைபெற்று வருகிறது. இவை அரசு அங்கீகாரத்துடன் வெளியிடப்படும்.

## நோய்க் கட்டுப்பாடு

பப்பாளி, மரவள்ளி, மல்பெரி, பருத்தி, பயறுவகை, காய்கறி, பழவகை, மலர்ப்பயிர் போன்றவற்றில் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த உயிரியல் முறையில், புதிய ரக ஒட்டுண்ணிகளை வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆய்வுக்குப் பின் அறிமுகப்படுத்தியது. இதனால், தற்போது 80 சதவீதம் மாவுப்பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வேளாண் உற்பத்திக்கு ஆதாரமான தரம் மிக்க விதை உற்பத்தியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முக்கியப் பங்கு வகிக்கிறது. சிறுதானிய, தீவன, பயறு மற்றும் பருத்தி வகைகளுக்கு 32 வல்லுநர் விதை உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

தி இந்து
http://tamil.thehindu.com
தமிழால் இணைவோம்
RNI No. TNTAM21314/22/1/2013-TC
Vol. 1 No. 97


# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விவசாயிகள் தின வாழ்த்துக்கள்

## வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த அனைத்து தொழில் நுட்பங்களை (http://agritech.tnau.ac.in/) இணையதளத்தில் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம்.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் இணைய தளம்

உழவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்கில்...

English | தமிழ்



முதல் பக்கம் | எங்களைப் பற்றி | வெற்றிக் கதைகள் | உழவர் கூட்டமைப்பு | உழவர்களின் கண்டுபிடிப்பு | வெளியீடுகள்| தொடர்புக்கு | தேடு

**வேளாண்மை**



நெல், பயறு வகைகள், எண்ணை வித்துக்கள், தீவனப் பயிர்கள், பருவங்கள், பூச்சி, மேலும் தகவலுக்கு...

**தோட்டக்கலை**



நாற்றாங்கால், பழங்கள், வாசனை பயிர்கள், நில எழிலூட்டுதல், மேலும் தகவலுக்கு...

**வேளாண் விற்பனை**



வணிக வாரியங்கள், உணவு பதப்படுத்துதல், சந்தைகள், மேலும் தகவலுக்கு...

**வேளாண் பொறியியல்**



பண்ணைக்கருவிகள், அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள், மேலும் தகவலுக்கு...

**விதை**



விதை உற்பத்தி, விதைச் சான்று, விதை வல்லுநர், விதை சட்டம், மேலும் தகவலுக்கு...

**அங்கக வேளாண்மை**



அங்கக வேளாண்மை, மண்புழு, சூடோமோனாஸ், மேலும் தகவலுக்கு...

**பட்டுப்புழு வளர்ப்பு**



மல்பரி, பட்டு புழு வளர்ப்பு, கூட்டு புழு, மேலும் தகவலுக்கு...

**வனவியல்**



வேளாண் வனவியல்,மரம் வளர்ப்பு, வன உயிரின வளம், மேலும் தகவலுக்கு...

**மீன்வளம்**



மீன் வளர்ப்பு, கடல் மீன், இறால், மீன் இனங்கள், ஆற்று மீன்வளம், மேலும் தகவலுக்கு...

**கால்நடை**



கால்நடைகள், பன்றி வளர்ப்பு, கால்நடை சேவை மையங்கள், ஆடு, கோழி, மேலும் தகவலுக்கு...

**தொழில் நுட்பங்கள்**
- பயிர் சாகுபடி
- பயிர் பாதுகாப்பு
- பயிர் பெருக்கம்
- விதை
- உயிரிய தொழில்நுட்பம்
- அறுவடை பின் சார் தொழில் நுட்பம்
- நன்னெறி முறைகள்-வேளாண்/ஆய்வகம்,மேலாண்மை

**சிறப்பு தொழில் நுட்பங்கள்**
- நேரடி நெல் விதைப்பு
- திருந்திய நெல் சாகுபடி
- வல்லுநர் அமைப்பு
- மானாவாரி நில தொழில்நுட்பம்
- திருந்திய நெல் சாகுபடி
- செம்மை கரும்பு சாகுபடி
- துவரையில் நாற்று நடும் தொழில் நுட்பம்
- வாழையில் அடர் நடவு

**திட்டம் மற்றும் சேவைகள்**
- அரசு திட்டங்கள் & சேவைகள்
- வட்டார வளர்ச்சி
- வங்கி சேவை & கடனுதவி
- பயிர் காப்பீடு
- KVK I ATMA I NGOs & SHGs
- அக்ரி கிளினிக் I SFAC
- கிசான் அழைப்பு மையம்
- பல்லாண்டு மேம்பாட்டு குறிக்கோள்

**தினசரி நிகழ்ச்சிகள்**
- TNAU சமுதாய வானொலி
- தொலைகாட்சி நிகழ்ச்சிகள்
- வானொலி நிகழ்ச்சிகள்
- அணை நீர்மட்டம்
- மனிதவள மேம்பாட்டு
- தமிழ்நாடு அரசு அறிவிப்புகள்
- IMD-சென்னை (நடப்பு வானிலை விவரம்)
- உழவர் இணையதளம்

**வேளாண் செய்திகள்**
- பாரம்பரிய வேளாண்மை
- வளம்குன்றா வேளாண்மை
- பண்ணை சார் தொழில்கள்
- காப்புரிமை
- ஊட்டச்சத்து
- பயிர் உற்பத்தி கையேடு தோட்டக்கலை-2013
- பயிர் உற்பத்தி கையேடு வேளாண்மை - 2012
- உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம்
- முக்கிய வலைதளங்கள்
- வலைப்பதிவுகள்

**சந்தை செய்திகள்**
- AGMARKNET
- DEMIC - செய்தி வெளியீடுகள NEW
- விவசாய உற்பத்தியாளர் அமைப்பின் கொள்கை
- குறைந்த பட்ச ஆதார விலை
- இடுபொருள் நிலவரம்
- ஏற்றுமதி & இறக்குமதி
- NHRDF I MCX
- NCDEX I NSEL
- NIAM I FIEO I FCI
- தகவல் மற்றும் தொழில்நுட்பம்
- தேசிய உணவு பாதுகாப்பு சட்டம், 2013

**இடுபொருள் பொருளடக்கம்**
- உழவர் பெருவிழா 2013
- தேசிய வேளாண் வானிலை ஆலோசனை
- தமிழ்நாட்டின் நோக்கம் - 2023
- சுற்றுச்சூழல் மாசுப்பாடு
- இயற்கை சீற்ற மேலாண்மை
- பருவ மற்றும் பயிர் அறிக்கை
- TN -12வது ஐந்தாண்டு திட்டம்
- GOI - 12வது ஐந்தாண்டு திட்டம்
- த.வே.ப.க - 12வது ஐந்தாண்டு திட்டம்
- இந்திய அரசு விவசாய புள்ளி விவரங்கள் 2012-13
- FCMS I AGRISNET

**சமீபத்திய செய்திகள்**
- கோமாரி நோய் NEW
- விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேடு 2011-14 NEW
- த.வே.ப.க - தொழில்நுட்பங்கள்
- தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் இருந்து துணைவேந்தர் வருகை
- தமிழ்நாடு நெல் விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு
- பூச்சி மேலாண்மை கருத்தரங்கு
- விதை இருப்பு
- தமிழக முதல்வர் கணினி விருது 2013
- ICAR விருதுகள் 2013

**விருதுகள்**

**வல்லுநர் அமைப்பு (பயிர் மருத்துவர்)**



**தினசரி சந்தை நிலவரம்**



**தினசரி நாளிதழ் வேளாண் செய்திகள்**



த.நா.வே.ப. வானிலை

த.நா.வே.ப. முன்னறிவிப்பு

NADP in TNAU

NAIP in TNAU

**இவ்விணையதளத்தில்**
- உயர் விளைச்சல் பெற்றிட முக்கிய தொழில்நுட்பங்கள்
- தோட்டக்கலைப் பயிர்களுக்கான தினசரி சந்தை நிலவரம்
- வேளாண் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கான வல்லுநர் அமைப்பு
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வானிலை முன்னறிவிப்புகள்
- மத்திய மற்றும் மாநில அரசு வேளாண் திட்டங்கள் மற்றும் சேவைகள்
- உழவர்களின் வெற்றிக் கதைகள் மற்றும் தினசரி நாளிதழ் வேளாண் செய்திகள் போன்றவை கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் விபரங்களுக்கு
இயக்குநர்
விரிவாக்க கல்வி இயக்ககம்
**Ph : 0422-6611352**
**e-mail : dee@tnau.ac.in**

**வேளாண் உற்பத்தியை இருமடங்காக்குவோம், உழவரின் வருவாயை மும்மடங்காக்குவோம்.**